செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.71/2023 நாள் : 07.09.2023

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் ரூ.70.72 கோடி மதிப்பீட்டிலான கான்கிரீட் கழிவுநீர் குழாய்களை மாற்றி புதிய வார்ப்பிரும்பு குழாய்கள் அமைக்கும் திட்டப் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (07.09.2023) தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ரூ.70.72 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் கான்கிரீட் கழிவுநீர் குழாய்களை மாற்றி புதிய வார்ப்பிரும்பு குழாய்கள் அமைக்கும் திட்டப் பணிகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களின் முன்னிலையில் இன்று (07.09.2023) ஆலந்தூர் மண்டலம், ஏரிக்கரை சாலையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

**பின்னர் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :**

ரூ.70.72 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் மூலம் ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் பகுதிகளில் உள்ள 2 இலட்சத்து 59 ஆயிரம் மக்கள் பயன்

பெறுவார்கள். இப்பணிகள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி, மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் ரூ.524.62 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டப் பணிகளும், ரூ.864.66 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் நடைபெற்று வருகிறது. இதன்மூலம், 14 இலட்சத்து 85 ஆயிரத்து 835 பொதுமக்கள் பயன் பெறுவார்கள். இப்பணிகள் அனைத்தும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும், மேலும், கழிவுநீரை சுத்திகரித்து முறையாக வெளியேற்றும் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையைப் பொறுத்தவரை நாளொன்றுக்கு 1000 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பல்லாவரம் மற்றும் தாம்பரம் பகுதிகளுக்கும் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் நாளொன்றுக்கு 2000 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னைக்கு அருகிலுள்ள சிக்கராயபுரம் குவாரியிலுள்ள நீரினை மறுபடியும் செம்பரம்பாக்கம் ஏரிக்கு அனுப்பி சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் சிக்கராயபுரம் குவாரியில் மழை நீரினை

சேகரித்திட நீர்வளத் துறையின் சார்பில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

நெதர்லாந்து நாட்டின் உதவியுடன் 1000 ஏரிகள் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகரில் பொதுமக்களின் வசதிக்காக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிதாக 1000 கட்டணமில்லா கழிவறைகள் கட்டப்பட்டு மக்கள் உபயோகத்திற்கு விரைவில் கொண்டு வரப்பட உள்ளது எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., ஆலந்தூர் மண்டல குழுத் தலைவர் திரு.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி.பூங்கொடி ஜெகதீஸ்வரன், சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. ஆர். சிவமுருகன், மேற்பார்வைப் பொறியாளர் திருமதி.எஸ்.பிரேமா, பகுதிப் பொறியாளர் திருமதி.எச்.எஸ்.கல்யாணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்